[24th September 1958

ஆகவே ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளை சர்க்கார் எடுத்துக் கொள்வது என்ன ஆயிற்று ? எத்தனை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்போது முதலில் தாலூகா தலைநகரத்தில் இருக்கிற ஆஸ்பத்திரியை எடுத்துக்கொண்டு வருகிறோம். இன்னும் ஒரு வருஷம், இரண்டு வருஷத்தில் எல்லா தாலூகா தலைநகரா ஆஸ்பத்திரிகளையும் எடுத்துக்கொண்டுவிடலாம். விலை உயர்ந்த மருந்து தேவைப்பட்டால் எழுதித்தான் கொடுப்பார்கள். அவர்களையே வாங்கி வரும்படி சொல்லச் சொல்லியிருக்கிறோம்.

P.W.D. staff

* 505 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received on 28th February 1958 from Irrigation Conservancy subordinates and Telephone Gumastahs' Association;

(*b*) the number of Irrigation Conservancy subordinates and Telephone gumasthas;

(*c*) their minimum educational qualifications; and

(*d*) their present scale of pay?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) There are 215 posts of Irrigation Conservancy subordinates and 66 posts of Telephone gumasthas.

(*c*) *Irrigation Conservancy Subordinates*—(i) Experience as maistry in building or irrigation works for a period of not less than 5 years; or

(ii) (*a*) A pass by the lower grade in the Government Technical examination in—

(1) Surveying and Levelling; and

(2) Earthwork and Roads; and

(*b*) A completed Secondary School Leaving-Certificate issued under the authority of the Government of Madras.

Telephone gumasthas.—Completed Secondary School-Leaving Certificate issued under the authority of the Government of Madras.

(*d*) Irrigation Conservancy Subordinates, I Grade and Telephone Gumasthas, I Grade—Rs. 30—1—45.

Irrigation Conservancy Subordinates, II Grade and Telephone Gumasthas, II Grade—Rs. 24—1—30.

Sri S. LAZAR : எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படித்து அதன் பிறகு தனிப் பயிற்சி பெறவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இவர்களுக்குச் சம்பளம் 24 ரூபாய் என்று இருப்பது சரியா ? அவர்களது சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri P. KAKKAN : இது பரிசீலனையில் இருந்து வருகிறதென்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.